கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
இரண்டாம் வருட கலைமாணித் தேர்வு 2011/2012
(May 2015) (வெளிவாரி)

# ECO 201 MicroEconomics

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக

01. (அ) அளவுசார் ஆய்வுக்கும் (Cardinal Utility), வரிசைசார் ஆய்வுக்கும் (Ordinal Utility) இடையிலான வேறுபாட்டை அடையாளப்படுத்துக.

(05 புள்ளிகள்)

(ஆ) நுகர்வோன் ஒருவன் கொள்வனவு செய்கின்ற y,z என்கின்ற இரு வேறுபட்ட பொருட்களினது மொத்தப் பயன்சார்பு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

$Tu_y = 46y - y^2$
$Tu_z = 20z - z^2$
y பொருளின் விலையானது P(y) = ரூபா 05/- எனவும்
z பொருளின் விலையானது P(z)= ரூபா 01/- எனவும்
வாராந்த வருமானம் (I)= ரூபா 21/- எனவும் கொள்க.

(i) மேற்படி நுகர்வோனின் y, z பண்டங்களின் சமநிலை கொள்வனவுகளைத் தருக.

(05 புள்ளிகள்)

(ii) இந்த நபரின் வராந்த வருமானம் ரூபா 47/- ஆக அதிகரிப்பின் புதிய சமநிலை கொள்வனவுகளை கணிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(iii) y பண்டத்தின் விலையானது ரூபா 2/- ஆக வீழ்ச்சியடைகின்றதாயின் (வருமானம் ரூபா 21/- ஆக இருகின்ற போது) அவரின் புதிய சமநிலைக் கொள்வனவை கணிப்பிடுவதுடன், தொடர்புடைய கேள்வி வளைகோட்டையும் வரைக.

(05 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

02. (அ) வருமான நுகர்ச்சி வளைகோட்டிலிருந்து ஏஞ்சல் கோட்டினைத் தருவிக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) வருமான விளைவு, பதிலீட்டு விளைவு என்பவற்றிக்கிடையில் காணப்படும் தொடர்பினை விளக்குக.

(05 புள்ளிகள்)

(இ) ABC தொலைக்காட்சியானது ஒரு ரீசேட் விளம்பர மேம்படுத்தலை மக்களின் மனங்களில் பதியச் செய்கின்றது. குறித்த ரீசேட்டினை சந்தைப்படுத்தும் நிறுவனத்தின் மாதாந்த விற்பனையானது பின்வருமாறு அமைந்துள்ளது.
Q=1500-200P
இங்கு Q என்பது ரீசேட்டின் விற்பனைத் தொகையையும் P என்பது அதன்

விலையையும் குறித்து நிற்கிறது.

(i) குறித்த விற்பனை நிறுவனத்தால் ஒவ்வொன்றும் ரூபா 4.50 என்ற விலையி எத்தனை ரீசேட்டுக்களை விற்கமுடியும் என்பதைக் கணிப்பிடு
(02 புள்ளிகள்

(ii) குறித்த நிறுவனம் 900 ரீசேட்டுக்களை விற்பனை செய்ய வேண்டுமாயின் என்ன விலையினை அதற்காக நிர்ணயிக்க வேண்டும்?
(03 புள்ளிகள்

(iii) எந்த விலையில் ரீசேட்டுக்கான விற்பனை புச்சியத்துக்கு (zero) சமனாக இருக்கும்.
(02 புள்ளிகள்

(iv) ஒவ்வொன்றும் 5 ரூபா விலையில் புள்ளிவிலை நெகிழ்ச்சியை கணிப்பீடு செய்க.
(03 புள்ளிகள்

(மொத்தம் 20 புள்ளிகள்

03. (அ) கேள்வி நெகிழ்ச்சி என்றால் என்ன என்பதைக் கூறி நெகிழ்ச்சி கணிப்பீட்டின் பயன்பாட்டினை நடைமுறை உதாரணத்துடன் விளக்குக.
(06 புள்ளிகள்

(ஆ) "டொக்சி" நிறுவனமானது X வகைப் பொருளினைச் சந்தைப்படுத்துகின்றது. இதனுடைய கேள்வித் தொழிற்பாடானது கீழேயுள்ளவாறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

$$Q_x = 1.5 - 3P(x) + 0.8Z + 2P(Y) - 0.6P(S) + 1.2A$$

இங்கு
$Q_x$ = X வகைப் பொருளுக்குரிய விற்பனைத் தொகை
P(x) = குறித்த ஒரு அலகு X பொருளுக்குரிய விற்பனை விலை
Z = சராசரி வருமானம்
P(y) = X பொருள் தொடர்பான போட்டிப் பொருளுக்குரிய விற்பனை விலை
P(S) = சீனியின் விற்பனை விலை
A = X வகைப் பொருளுக்குரிய விளம்பர செலவு

(i) P(x) = Rs 2/=, Z = Rs 2.5/=, P(y) = 1.8/=, P(s) = Rs 0.5/=, அத்துடன் A = Rs. 1/= ஆ இருக்கும்போது X பொருளுக்குரிய விற்பனைத் தொகையினைக் கணிப்பிடுக.
(04 புள்ளிகள்

(ii) ஏனைய காரணிகள் மாறாதபோது P(x) ஆனது Rs 4/= ஆக அதிகரித்தால் புதி கேள்வித்தொகை மாற்றத்தைக் கணிப்பிடுக.
(03 புள்ளிகள்

(iii) மேலே தரப்பட்ட தரவிலிருந்து X பொருளுக்கான விலைசார் புள்ளி நெகிழ்ச்சியையு (Point Elasticity) விலைசார் வில் நெகிழ்ச்சியையும் (Arc Elasticity) கணிப்பிடுக.
(04 புள்ளிகள்

(iv) நீர் பெற்றுக்கொண்ட விடையிலிருந்து எவ்வகையான பொருள் என்பதைக்கூறி விளக்குக
(03 புள்ளிகள்

மொத்தம் 20 புள்ளிகள்

04. (அ) உற்பத்தித் தொழிற்பாடு என்றால் என்ன? ஒவ்வொரு வகைக்குமான உற்பத்தி தொழிற்பாடுகளுக்கு உதாரணம் தருக.

(06 புள்ளிகள்)

(ஆ) குறுங்கால உற்பத்தியில் உற்பத்தி தீர்மானம் எக்கட்டத்தில் மேற்கொள்ளப்படும் என்பதை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.

(06 புள்ளிகள்)

(இ) ஒரு நிறுவனத்தின் உற்பத்தி தொழிற்பாடானது பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது

$Q = K^{1/2} L^{1/2}$

(i) ஊழியம் மற்றும் முதலுக்கான எல்லை உற்பத்தியினை கணிப்படுக.

(ii) காரணிகளுக்கிடையிலான எல்லைத் தொழிநுட்ப பதிலீட்டு வீதத்தினை கணிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(உ) பின்வரும் ஒவ்வொன்றும் எவ்வகையான அளவுத்திட்ட விதியை உடையது எனக்காட்டுக.

(i) $Q=20K^{0.8} L^{0.3}$

(ii) $Q=AL^{\alpha} K^{\beta}$ இங்கு $\alpha=1$, $\beta=2$

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05. (அ) எவ்வாறு ஒரு நிறைபோட்டி சந்தையில் ஒரு நிறுவனத்தினுடைய விலையானது சந்தையினால் தீர்மானிக்கப்படுகின்றது என்பதை சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) நடைமுறை உலகில் நிறைபோட்டிச்சந்தை காணப்படுகின்றதா என்பதை விளக்குக.

(05 புள்ளிகள்)

(இ) விலையினை உருவாக்குவோன் (price maker) மற்றும் விலை ஏற்போன் (price taker)ஆகிய எண்ணக்கருக்களை வேறுபடுத்தி விளக்குக

(06 புள்ளிகள்)

(உ) ஒரு தனியுரிமை நிறுனத்தினுடைய பின்வரும் கேள்வி, செலவு தொழிற்பாடுகளை கவனத்திற் கொள்டு கீழ்வருவனவற்றிற்கு விடை தருக.

$Q = 21 - 0.1P$

$TC = 500 + 10Q$

(i) சமநிலை விலை, தொகை என்பவற்றை கணிக்குக.

(ii) ஒரு அலகு வெளியீட்டிக்கான இலாபம் என்ன?

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

06. (அ) சந்தை அமைப்புக்களை வகைப்படுத்துக?

(05 புள்ளிகள்)

(ஆ) தனியுரிமையில் விலைபேதப்படுத்தல் இடம்பெறத்தேவையான அடிப்படை நிபந்தனைகளை விளக்குக.

(05 புள்ளிகள்

(இ) தனியுரிமைச் சந்தையின் எல்லைவருமானம், சராசரிவருமான என்பவற்றிக்கிடையிலான தொடர்பினை விளக்குக.

(05 புள்ளிகள்

(ஈ) தனியுரிமைப் போட்டிச்நந்தையிலிருந்து சிலருரிமைச் சந்தையை வேறுபடுத்துவது அம்சங்களை விளக்குக.

(05 புள்ளிகள்

(மொத்தம் 20 புள்ளிகள்

07. (அ) மொத்த நிலையானசெலவு, மொத்த மாறும்செலவு என்பவற்றை வரைபட உதவியுட விளக்குக.

(04 புள்ளிகள்

(ஆ) எவ்வாறு எல்லைச் செலவு, சராசரிச் செலவு என்பவை மொத்த மாறும் செல வளையியில் இருந்து பெறப்படுகின்றது என்பதை வரைபட ரீதியாக விளக்குக.

(04 புள்ளிகள்

(இ) பின்வரும் மொத்தசெலவு தொழிற்பாட்டை கவனத்தில் எடுக்குக.

$$TC = 3Q^2 + 7Q + 12$$

(i) வெளியீட்டு மட்டம் 3 ஆக உள்ள போது AVC, AC, MC என்பவற்றின் மட்டங்களைக் காண்க.

(06 புள்ளிகள்)

(உ) நவீன செலவுக் கோட்பாடு பற்றி விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றிற்கு சிறு குறிப்பு எழுதுக.

(அ) நீண்டகால உற்பத்தித் தீர்மானம்

(ஆ) நுகர்வோன் சமநிலை

(இ) சமபயன் வளையி

(ஈ) எல்லைபதிலீட்டு வீதம்

(உ) அளவுத்திட்ட விளைவு விதி

(05 x 04 = 20 புள்ளிகள்)